# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வரும் மூன்று வழக்குகள் தொடர்பிலான 2021 நவம்பர் மாதம் 22 ஆம் திகதியிலிருந்து 2021 டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி வரையான நீதிமன்ற நடவடிக்கைகள் குறித்த முழுமையான அவதானிப்பு அறிக்கை[1]

2019 ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி - அதாவது, உயிர்த்த ஞாயிறு தினத்தில் நிகழ்ந்த குண்டுத்தாக்குதல் தொடர்பில் முன்னாள் பொலிஸ் மாஅதிபருக்கு எதிராகவும், முன்னாள் பாதுகாப்பு செயலாளருக்கு எதிராகவும், சந்தேக நபர்கள் 25 பேருக்கு எதிராகவும் கொழும்பு மேல்நீதிமன்றத்தில் வெவ்வேறான மூன்று வழக்குகளின் நீதிமன்ற நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## உள்ளடக்க அட்டவணை


*பிரிவு 1: சாராம்ச அட்டவணை* 2

***பிரிவு** 2: நவ்பர் மௌலவி உள்ளிட்ட 25 நபர்களுக்கு எதிரான HC (TAB) 2972/21 வழக்கின் முக்கிய தருணங்கள்* 6

***பிரிவு** 3: முன்னாள் பொலிஸ் மாஅதிபருக்கு எதிரான HC (TAB) 2900/21 வழக்கின் முக்கிய தருணங்கள்* 8

***பிரிவு** 4: முன்னாள் பாதுகாப்பு செயலாளருக்கு எதிரான HC (TAB) 2899/2021 வழக்கின் முக்கிய தருணங்கள்* 18


[1] This report based on CSR's trial monitoring on some days complimented by media reports

## பிரிவு 1: சாராம்ச அட்டவணை

| | HC (TAB) 2972/21 | HC (TAB) 2900/21 | HC (TAB) 2899/2021 |
|---|---|---|---|
| குற்றஞ்சாட்டப்பட்டவர் | நவ்பர் மௌலவி உள்ளிட்ட பிரதிவாதிகள் இருபத்தைந்து பேர் | முன்னாள் பொலிஸ் மாஅதிபர் பூஜித் ஜயசுந்தர | முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ |
| நீதிபதிகள் | தமித் தொட்டவத்த, அமல் ரணராஜா, நவரத்ன மாரசிங்க ஆகியோரை உள்ளடக்கிய மூன்று நபர் நீதிபதிகள் குழாம்[2] | நாமல் பலல்லே, ஆதித்ய பட்டபெந்திகே மற்றும் மொஹமட் இர்ஷடீன் ஆகியோரை உள்ளடக்கிய மூன்று நபர் மேல்நீதிமன்ற நீதிபதிகள் குழாம்[3] | நாமல் பலல்லே, ஆதித்ய பட்டபெந்திகே மற்றும் மொஹமட் இர்ஷடீன் ஆகியோரை உள்ளடக்கிய மூன்று நபர் மேல்நீதிமன்ற நீதிபதிகள் குழாம்[4] |

[2] Sirasa, 'News 1st Prime Time Sinhala News – 7 PM' (23 November 2021) <https://youtu.be/ruDYyKlETCQ?t=1395 > (Time duration: 24:50 – 25:45) accessed on 30th November 2021

[3] Sirasa, 'News 1st Prime Time Sinhala News – 7 PM' (22 November 2021) <https://youtu.be/Pf5sTYLBtiw?t=684 > (Time duration: 11:18 - 12:36) accessed on 30th November 2021,

හංසි නානායක්කාර, 'පූජිත්ට එරෙහිව සාක්ෂි දෙන්නැයි වත්මන් පොලිස්පතිට සිතාසි' (*මව්බිම*, 26 November 2021) <https://mawbima.lk/news-more/89746> accessed on 1st of December 2021,

Sirasa, 'News 1st Prime Time Sinhala News – 7 PM' (23 November 2021) <https://youtu.be/ruDYyKlETCQ?t=1393> (Time duration: 23:13 - 24:50) accessed on 30th November 2021

[4] Sirasa, 'News 1st Prime Time Sinhala News – 7 PM' (22 November 2021) <https://youtu.be/Pf5sTYLBtiw?t=684 > (Time duration: 11:18 - 12:36) accessed on 30th November 2021,

| | | | |
|---|---|---|---|
| குற்றஞ்சாட் டப்பட்டவர் களின் சட்டத்தர ணிகள் | 6ஆவது பிரதிவாதி சார்பில் சட்டத்தரணி நூர்தீன் எம். ஷஹீட் (Noordeen M. Shaheed), 22ஆவது, 23ஆவது மற்றும் 24ஆவது பிரதிவாதிகள் சார்பில் சட்டத்தரணி விஜிதானந்த மடவளகம (Vijithananda Madawalagama) ஆகியோர் ஆஜர் ஆகின்றனர். | சட்டத்தரணிகள் துலான் மிரிஹான, பிரியங்க குணரத்ன, நிர்மல கொடிதுவக்கு, ஜயந்த திலகரத்ன ஆகியோருடன் சட்டத்தரணி ரோஷான் தெஹிவள | ஜனாதிபதி சட்டத்தரணி மொஹான் வீரகோன் உள்ளிட்ட சட்டத்தரணிகள் குழாம்[5] |
| அரச தரப்பு சட்டத்தர ணிகள் | ஹரிப்ரிய ஜயசுந்தர (SDSG Haripriya Jayasundara**)**, லக்மாலி திசாநாயக்க (SC | சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் உள்ளிட்ட | பிரதி சொலிசிட்டர் ஜெனரல் சுதர்ஷன டி சில்வா உள்ளிட்ட |

---

හංසි නානායක්කාර, ‘පූජිත්ට එරෙහිව සාක්ෂි දෙන්නැයි වත්මන් පොලිස්පතිට සිතාසි’ (*මව්බිම*, 26 November 2021) <[https://mawbima.lk/news-more/89746](https://mawbima.lk/news-more/89746)> accessed on $1^{st}$ of December 2021,

Sirasa, ‘News $1^{st}$ Prime Time Sinhala News – 7 PM’ (23 November 2021) <[https://youtu.be/ruDYyKlETCQ?t=1393](https://youtu.be/ruDYyKlETCQ?t=1393)> (Time duration: 23:13 - 24:50) accessed on $30^{th}$ November 2021

5 තිළිණි ද සිල්වා, ‘පාස්කු ප්‍රහාරය වළක්වා ගැනීමට පියවර නොගැනීමේ වගකීම මට බාර ගන්න බෑ’ (*ලංකාදීප ONLINE*, 25November 2021) < පාස්කු ප්‍රහාරය වළක්වා ගැනීමට පියවර නොගැනීමේ වගකීම මට බාර ගන්න බෑ - Lankadeepa Online > accessed on $1^{st}$ of December 2021

| | | | |
|---|---|---|---|
| | Lakmali Dissanayake) மற்றும் சில சட்டத்தரணிகள் | சட்டத்தரணிகள் குழாம் | சட்டத்தரணிகள் குழாம் |
| பாதிப்புக்குள்ளான தரப்பினரின் சட்டத்தரணிகள் | ஜனாதிபதி சட்டத்தரணி நெவில் அபேரத்ன (Nevil Abeyrathna PC**)**, ஜனாதிபதி சட்டத்தரணி ரியென்சி அர்சகுலரத்ன (Riyanzi Arsakularathna PC), சட்டத்தரணி சுரேன் டீ. பெரேரா (Suren D. Perera) மற்றும் சட்டத்தரணி சஷிகா சேனாரத்ன (Sashika Senarathna) | - | - |
| விசாரணை நடைபெற்ற திகதிகள் (* குறியீடு CSR | 2021.11.23***** | 2021.11.22*****<br>2021.11.23*****<br>2021.11.24*****<br>2021.11.25*****<br>2021.11.26***** | **2021.11.22**<br>**2021.11.23**<br>**2021.11.24**<br>**2021.11.25***<br>**2021.11.26*** |

| | | | |
|---|---|---|---|
| தனிப்பட்ட முறையில் விசாரணையைக் கண்காணித்த திகதிகளைக் குறிக்கிறது) | | 2021.11.29 | 2021.12.13*<br>2021.12.14*<br>2021.12.15* |
| அடுத்த திகதியும் நேரமும் | 2022.01.12 | 2022.01.18 | 2022.01.18 – 1.30pm |

மேற்குறித்த ஒவ்வொரு வழக்கிலும் நிகழ்ந்த முக்கியமான விடயங்கள் இதன்பிறகு இவ்வறிக்கையில் விவரிக்கப்படும்.

## பிரிவு 2: நவ்பர் மௌலவி உள்ளிட்ட 25 நபர்களுக்கு எதிரான HC (TAB) 2972/21 வழக்கின் முக்கிய தருணங்கள்

2021 நவம்பர் மாதம் 23ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதல் தொடர்பில் கைது செய்யப்பட்ட நவ்பர் மௌலவி உள்ளிட்ட பிரதிவாதிகள் 25 பேருக்கு எதிராக சட்ட மாஅதிபரால் தொடரப்பட்டுள்ள வழக்கு விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டதுடன்[6] வழக்கை 2022 ஜனவரி 12ஆம் திகதி வரை ஒத்தி வைப்பதற்கு கொழும்பு மூன்று நபர் மேல்நீதிமன்ற நீதிபதிகள் குழாம் அன்றைய தினம் உத்தரவிட்டது[7]. தீவிர பாதுகாப்புடன் அன்றைய தினம் பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்[8]. தமக்கு எதிரான குற்றப்பத்திரிகையை தமிழ்மொழியில் வழங்குமாறு அப்போது நீதிமன்றத்தை வேண்டிக்கொண்டதுடன், அவற்றை தயார் செய்வதற்காக கால அவகாசம் வழங்கப்பட்டதன் பின்னர் வழக்கு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது[9]. அன்றைய தினம் வழக்கு விசாரணைக்காக எடுக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் பிரதிவாதிகள் 10 பேர் சார்பில் சட்டத்தரணிகள் தோன்ற வில்லை[10]. அதற்கமைய தமிழ்மொழி தெரிந்த சட்டத்தரணிகளை தோன்றச்செய்யுமாறு இலங்கை சட்டத்தரணிகள்

---

[6] Hiru News, 'Hiru TV NEWS 6.55PM' (23 November 2021) <https://youtu.be/m_m1HoRbDkI?t=1800 > (Time duration: 30:00 - 30:12) accessed on 1 December 2021

[7] Sirasa, 'News 1st Prime Time Sinhala News – 7 PM' (23 November 2021) <https://youtu.be/ruDYyKlETCQ?t=1393> (Time duration: 24:50 - 25:45) accessed on 30th November 2021

Ada Derana, 'Ada Derana Prime Time News Bulletin' (23 November 2021) <https://youtu.be/krMXahiVbvg?t=1877 > (Time duration: 31:43 - 31:56) accessed on 1 December 2021

[8] Sirasa, 'News 1st Prime Time Sinhala News – 7 PM' (23 November 2021) <https://youtu.be/ruDYyKlETCQ?t=1393> (Time duration: 24:50 - 25:45) accessed on 30th November 2021

[9] Sirasa, 'News 1st Prime Time Sinhala News – 7 PM' (23 November 2021) <https://youtu.be/ruDYyKlETCQ?t=1393> (Time duration: 24:50 - 25:45) accessed on 30th November 2021

[10] Sirasa, 'News 1st Prime Time Sinhala News – 7 PM' (23 November 2021) <https://youtu.be/ruDYyKlETCQ?t=1393> (Time duration: 24:50 - 25:45) accessed on 30th November 2021

சங்கத்தின் தலைவருக்கு நினைவூட்டல் கடிதமொன்றை அனுப்புமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது[11].

[11] Sirasa, 'News 1st Prime Time Sinhala News – 7 PM' (23 November 2021) <https://youtu.be/ruDYyKlETCQ?t=1393> (Time duration: 24:50 - 25:45) accessed on 30th November 2021

## பிரிவு 3: முன்னாள் பொலிஸ் மாஅதிபருக்கு எதிரான HC (TAB) 2900/21 வழக்கின் முக்கிய தருணங்கள்

2021 நவம்பர் மாதம் 22ஆம் திகதி முற்பகல் வேளையில் திரு. பூஜித் ஜயசுந்தர மூன்று நபர் மேல்நீதிமன்ற நீதிபதிகள் குழாம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார்[12]. 2019 உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதல் தொடர்பில் புலனாய்வுப்பிரிவு முன்கூட்டியே எச்சரிக்கை செய்திருந்தபோதும் தக்க நடவடிக்கைகள் எடுக்காமை காரணமாக குற்றவியல் கவலையீனம் (Criminal negligence) தொடர்பில் அவருக்கு எதிராக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன (855 குற்றச்சாட்டுகள் மற்றும் அண்ணளவாக 1200 சாட்சிகள்)[13]. திரு. பூஜித் ஜயசுந்தரவிடம் குற்றச்சாட்டுகள் வாசித்துக்காண்பிக்கப்பட்டுள்ளதுடன் அவர் தான் குற்றமற்றவர் எனக் கூறியுள்ளார்[14]. முறைப்பாட்டாளர் தரப்பு புறத்திருந்து முன்வைக்கப்பட்டுள்ள 33 விடயங்களை சாட்சி நெறிப்படுத்தல்களோ மற்றும் ஆட்சேபனைகளோ இன்றி பிரதிவாதி தரப்பினர் ஏற்றுக்கொள்வதாக பிரதிவாதியின் சட்டத்தரணி சுட்டிக்காட்டியுள்ளார்[15]. பிரேதப் பரிசோதனை அறிக்கைகள் மற்றும் நீதிமன்ற வைத்திய அறிக்கை ஆகியவை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன[16].

2021 நவம்பர் 23ஆம் திகதி சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திரு. திலீப பீரிஸ் அவர்களால் முன்னாள் அரச புலனாய்வுப்பிரிவு பிரதானியான திரு. நிலந்த ஜயவர்தனவின் (**Chief of former State Intelligence**

---

[12] Sirasa, 'News 1st Prime Time Sinhala News – 7 PM' (22 November 2021) <https://youtu.be/Pf5sTYLBtiw?t=684 > (Time duration: 11:18 - 12:36) accessed on 30th November 2021

[13] Trial monitoring report on 22nd of November 2021 – Case no: HC (TAB) 2900/21

[14] 'සියලු අධිචෝදනාවලට තමන් නිවැරදිකරු බව පූජිත් ජයසුන්දර කියයි' (<සියලු අධිචෝදනාවලට තමන් නිවැරදිකරු බව පූජිත් ජයසුන්දර කියයි - Sri Lanka News (newsfirst.lk)> accessed on 1 December 2021

[15] 'සියලු අධිචෝදනාවලට තමන් නිවැරදිකරු බව පූජිත් ජයසුන්දර කියයි' (<සියලු අධිචෝදනාවලට තමන් නිවැරදිකරු බව පූජිත් ජයසුන්දර කියයි - Sri Lanka News (newsfirst.lk)> accessed on 1 December 2021

[16] 'සියලු අධිචෝදනාවලට තමන් නිවැරදිකරු බව පූජිත් ජයසුන්දර කියයි' (<සියලු අධිචෝදනාවලට තමන් නිවැරදිකරු බව පූජිත් ජයසුන්දර කියයි - Sri Lanka News (newsfirst.lk)> accessed on 1 December 2021

**Services Chief Nilantha Jayawardhana)** சாட்சியங்கள் நெறிப்படுத்தப்பட்டன[17]. அவரது கருத்தின் படி, SIS (**State Intelligence Service)**இனால் பொலிஸ் மாஅதிபர் மற்றும் பாதுகாப்புச் செயலாளருக்கு உரிய நடவடிக்கைகள் எடுப்பதற்காக தகவல்கள் வழங்கப்படுவதோடு தகவல் சேகரிப்பதைத் தவிர SISஇனால் வேறெந்த நடவடிக்கையிலும் தொடர்பு பட முடியாது[18]. அவர் சஹ்ரான் ஹஷீம் தொடர்பான தகவல்களை பொலிஸ் மாஅதிபர் மற்றும் பாதுகாப்பு செயலாளருக்கு வழங்கியுள்ளார்[19]. அவர் அவர்களுக்கு அண்ணளவாக 340 அறிக்கைகளை அனுப்பியுள்ளார்[20].

2021 நவம்பர் மாதம் 24ஆம் திகதி அரச புலனாய்வுப்பிரிவின் முன்னாள் பிரதானி சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் திரு. நிலந்த ஜயவர்தன முறைப்பாட்டாளர் தரப்பின் சாட்சியாக சாட்சியளித்தார். அவர் தனது சாட்சியத்தின்போது 2017 ஒக்டோபர் 31 ஆம் திகதி பொலிஸ் மாஅதிபருக்கு தான் அனுப்பிய கடிதமொன்றின் மூலம் இந் நாட்டில் IS கோட்பாட்டினை பரப்புகிற, எதிர்காலத்தில் தாக்குதல் ஒன்றை மேற்கொள்ளக்கூடிய நபர்கள் 94 பேர் பற்றிய தகவல்களை வழங்கியதாகக் குறிப்பிட்டார்[21]. உயிர்த்த ஞாயிறு தினத்தில் தெஹிவளையில் தற்கொலை குண்டுத்தாக்குதலை மேற்கொண்ட ஜமீல் என்பவர் அந்த பெயர்ப்பட்டியலில் இலக்கம் 1இல் உள்ளடக்கப்பட்டிருந்ததாகவும், சஹ்ரான் ஹஷீம், மொஹமட் ரில்வான், மொஹமட் மில்ஹான், நவ்பர் மௌலவி ஆகிய நபர்களின் பெயர்களும் அதில் உள்ளடங்கியிருந்ததாகவும் சாட்சியாளர் குறிப்பிட்டார்[22]. அதேபோன்று, இந்த தினத்தில் முறைப்பாட்டாளர்

---

17 Trial monitoring report on 23rd of November, 2021 – Case No: HC (TAB) 2900/21

18 Trial monitoring report on 23rd of November, 2021 – Case No: HC (TAB) 2900/21

19 Trial monitoring report on 23rd of November, 2021 – Case No: HC (TAB) 2900/21

20 Trial monitoring report on 23rd of November, 2021 – Case No: HC (TAB) 2900/21

21 Hiru News, 'Hiru TV NEWS 6.55PM' (24 November 2021) <https://youtu.be/KZUbP8Jrlow?t=1616> (Time duration: 26:55 - 29:28) accessed on 1 December 2021

22 Hiru News, 'Hiru TV NEWS 6.55PM' (24 November 2021) <https://youtu.be/KZUbP8Jrlow?t=1616> (Time duration: 26:55 - 29:28) accessed on 1 December 2021

தரப்பின் சாட்சி இலக்கம் 10 வரை பல்வேறு ஆவணங்கள் குறித்துக்கொள்ளப்பட்டன[23].

2021 நவம்பர் மாதம் 25ஆம் திகதியும் முறைப்பாட்டாளர் தரப்பின் சார்பில் திரு. நிலந்த ஜயவர்தன சாட்சியமளித்தார். இந்த தினத்தில் முறைப்பாட்டாளர் தரப்பின் சாட்சி இல 37 வரைக்குமான சாட்சியங்கள் குறித்துக்கொள்ளப்பட்டன[24]. முறைப்பாட்டாளர் தரப்பின் சாட்சி இல 32, குற்றவியல் புலனாய்வுத் திணைக்களத்தின் பிரதி பொலிஸ் மாஅதிபர் செனவிரத்னவுக்கு அனுப்பப்பட்டது எனவும் அதனுடன் இணைப்பு ஒன்றும் இருந்தது எனவும் குறிப்பிடப்பட்டது[25]. அது இலங்கை பூராகவும் ISIS அமைப்புடன் தொடர்புடைய நபர்கள் 129 பேர் குறித்த இரகசிய அறிக்கையாகும் எனவும் கூறப்பட்டது[26]. 2019ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வனாதவில்லு பிரதேசத்தில் ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டமை தொடர்பாகவும் குறிப்பிடப்பட்டது[27]. தாக்குதல் தொடர்பான முதல் தகவல் 2019 ஏப்ரல் மாதம் 04ஆம் திகதி சாட்சியாளருக்கு வெளிநாட்டு தகவலாளர் ஒருவரிடமிருந்து WhatsApp வழியாக கிடைத்ததாகவும் குறிப்பிடப்பட்டது[28]. சாட்சியாளர் தகவலாளரது இலக்கத்துக்கு தொலைபேசி அழைப்பொன்றை ஏற்படுத்தியதாகவும் குறிப்பிடப்பட்டது[29]. கிடைக்கப்பெற்ற அந்த தகவல்களை சாட்சியாளர் பிரதிப் பணிப்பாளருக்கும் உதவிப் பணிப்பாளர்களுக்கும் அறிவித்து தகவலை develop செய்யுமாறு (மேம்படுத்துமாறு) தெரிவித்ததாகவும் குறிப்பிடப்பட்டது[30]. சம்பந்தப்பட்ட தகவல் எழுத்து மூலமாக வேண்டும்

[23] Trial monitoring report on 24th of November, 2021 – Case No: HC (TAB) 2900/21

[24] Trial monitoring report on 25th of November, 2021 – Case No: HC (TAB) 2900/21

[25] Trial monitoring report on 25th of November, 2021 – Case No: HC (TAB) 2900/21

[26] Trial monitoring report on 25th of November, 2021 – Case No: HC (TAB) 2900/21

[27] Trial monitoring report on 25th of November, 2021 – Case No: HC (TAB) 2900/21

[28] Trial monitoring report on 25th of November, 2021 – Case No: HC (TAB) 2900/21

[29] Trial monitoring report on 25th of November, 2021 – Case No: HC (TAB) 2900/21

[30] Trial monitoring report on 25th of November, 2021 – Case No: HC (TAB) 2900/21

என தகவலாளருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளதோடு அத்தகவல் 5ஆம் திகதி எழுத்துமூலம் கிடைக்கப்பெற்றதாகவும் குறிப்பிடப்பட்டது[31].

2021 நவம்பர் மாதம் 26ஆம் திகதியிலும் திரு. திலீப பீரிஸ் முதலாம் சாட்சியாளர் திரு. நிலந்த ஜயவர்தன தொடர்பான சாட்சியங்களை நெறிப்படுத்தியதோடு, சாட்சியமளித்த சாட்சியாளர் 2019 ஏப்ரல் 04ஆம் திகதி ஓர் இரகசியப் பிரதிநிதியினூடாக கத்தோலிக்க தேவாலயங்கள் உள்ளிட்ட 08 இடங்களின் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாக அடிப்படை தகவல்கள் கிடைக்கப் பெற்றதாகக் குறிப்பிட்டார்[32]. பிரதான தாக்குதலுக்கு நேரடியாகத் தொடர்புடைய வகையில் 2019 ஏப்ரல் 16ஆம் திகதி காத்தான்குடி பிரதேசத்தில் மோட்டார் சைக்கிள் ஒன்றை வெடிக்கவைத்த சம்பவம் நிகழ்ந்ததாக சாட்சியாளர் கூறினார்[33]. மீண்டும் 2019 ஏப்ரல் 20ஆம் திகதி மாலை, சாட்சியாளருக்கு ஏப்ரல் 21ஆம் திகதி மேற்கொள்ளப்படவுள்ள உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக நம்பத்தகுந்த தகவல்கள் கிடைக்கப்பெற்றதாகவும் தெரிகிறது[34]. சாட்சியாளர் சாட்சியமளிக்கும்போது தனக்குக் கிடைத்த தகவல்களை பொலிஸ் மாஅதிபர், பாதுகாப்பு செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் 08 பேருக்கு அனுப்பியதாகவும் குறிப்பிட்டார்[35]. இவ்வழக்கின் சாட்சியங்களை வழங்குவதற்கு 2021 நவம்பர் 29ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு நீதிபதிகள் குழாமினால் அன்றைய தினம் தற்போதைய பொலிஸ் மாஅதிபர் திரு. சீ.டீ. விக்ரமரத்னவுக்கு அழைப்பாணை

[31] Trial monitoring report on 25th of November, 2021 – Case No: HC (TAB) 2900/21

[32] Trial monitoring report on 26th of November, 2021 – Case No: HC (TAB) 2900/21

[33] Trial monitoring report on 26th of November, 2021 – Case No: HC (TAB) 2900/21

[34] Trial monitoring report on 26th of November, 2021 – Case No: HC (TAB) 2900/21

[35] Trial monitoring report on 26th of November, 2021 – Case No: HC (TAB) 2900/21

விடுக்கப்பட்டது[36]. பொலிஸ் மாஅதிபர் இவ் வழக்கின் 1214ஆவது சாட்சியாளரும் ஆவார் [37].

2021 நவம்பர் 29ஆம் திகதி இவ் வழக்குடன் தொடர்புடைய விடயங்கள் குறித்து தற்போதைய பொலிஸ் மாஅதிபர் திரு. சீ.டி. விக்ரமரத்ன அன்றைய தினம் சாட்சியமளித்தார்[38]. வழக்கின் முதல் சாட்சியாளர் திரு. நிலந்த ஜயவர்தனவை குறுக்கு விசாரணை செய்த திரு. பூஜித் ஜயசுந்தர சார்பாக ஆஜரான சட்டத்தரணி தாக்குதலுக்கு முன்னதாக ஏப்ரல் 04 ஆம் திகதி கிடைத்த வெளிநாட்டுத் தகவலாளரின் முன்னறிவித்தலை ஏப்ரல் 20ஆம் திகதி வரை அரச புலனாய்வுப் பிரிவு நிச்சயமானதொரு புலனாய்வுத் தகவலாக ஆக்கிக்கொள்ளத் தவறியதா என வினவினார்[39]. சாட்சியாளரான திரு. நிலந்த ஜயவர்தன கூறியதாவது, தாக்குதலுக்கு முந்தைய தினம் பிற்பகல் 4.12 மணிக்கு வெளிநாட்டு புலனாய்வுப்பிரிவு தகவலாளரிடமிருந்து தனக்கு மீண்டும் ஓர் அழைப்பு வரும் வரை ஏப்ரல் 04ஆம் திகதி கிடைத்த தகவலை நிச்சயமான புலனாய்வுத் தகவலாக உறுதிப்படுத்துவதற்கு போதிய தரவுகள் தன்னிடம் இருக்கவில்லை என்பதாகும்[40]. இதன்போது முறைப்பாட்டாளர் தரப்பின் சட்டத்தரணி மீண்டும் வினவியதாவது, ஏப்ரல் 04ஆம் திகதி தொடக்கம் ஏப்ரல் 20ஆம் திகதி வரையான

---

[36] Ada Derana, 'Ada Derana Prime Time News Bulletin' (26 November 2021) <https://www.youtube.com/watch?v=4KjDo-BBcso&t=1600s> (Time duration: 26:40 - 27:06) accessed on 1 December 2021,
Hiru News, 'Hiru TV NEWS 6.55PM' (26 November 2021) < https://www.youtube.com/watch?v=CcNY6ePb-fg&t=1838s > (Time duration: 30:36 - 30:59) accessed on 1 December 2021,
Dilshan Tharaka, 'Easter attacks case: IGP noticed to appear in court'(*Daily news,* 27 November 2021)<https://www.dailynews.lk/2021/11/27/law-order/265829/easter-attacks-case-igp-noticed-appear-court > accessed on 1 December 2021

[37] Hiru News, 'Hiru TV NEWS 6.55PM' (26 November 2021) <https://www.youtube.com/watch?v=CcNY6ePb-fg&t=1838s > (Time duration: 30:36 - 30:59) accessed on 1 December 2021

[38] Ada Derana, 'Ada Derana Prime Time News Bulletin' (29 November 2021) <https://youtu.be/xXMgsN9s1iY?t=1314> (Time duration: 21:54 - 25:04) accessed on 1 December 2021

[39] Ada Derana, 'Ada Derana Prime Time News Bulletin' (29 November 2021) <https://youtu.be/xXMgsN9s1iY?t=1314> (Time duration: 21:54 - 25:04) accessed on 1 December 2021

[40] Ada Derana, 'Ada Derana Prime Time News Bulletin' (29 November 2021) <https://youtu.be/xXMgsN9s1iY?t=1314> (Time duration: 21:54 - 25:04) accessed on 1 December 2021

காலப்பகுதியினுள் நீங்கள் அன்றைய பொலிஸ் மாஅதிபருக்கு தாக்குதல் குறித்த நிச்சயமான புலனாய்வுத் தகவல் ஒன்றை வழங்கவில்லை என்பதை ஏற்றுக்கொள்கிறீரா என்பதாகும்[41]. ஆம், நான் ஏற்றுக்கொள்கிறேன். தாகுதலுக்கு முந்தைய தினம் வரை நான் தாக்குதல் குறித்த நிச்சயமான தகவல் ஒன்றை வழங்க வில்லை. ஆனாலும் நான் ஏப்ரல் 04ஆம் திகதி பெற்ற தகவலையும் சஹ்ரான் ஹஷீம் ஏப்ரல் 16ஆம் திகதி மேற்கொண்டிருந்த பயிற்சி போன்ற விடயங்கள் குறித்த தகவல்களையும் வழங்கினேன்.[42], என சாட்சியாளர் பதிலளித்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

20ஆம் திகதி பிற்பகல் 4.12 மணிக்கு தகவல் கிடைத்தன் பின்னர் 21ஆம் திகதி காலை 8.27 வரைக்கும் நீங்கள் எடுத்த நடவடிக்கைகள் யாவை என சட்டத்தரணி எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த சாட்சியாளர் திரு. ஜயவர்தன 20ஆம் திகதி 4.12 மணிக்கு தகவல் கிடைத்தபோது அவர் முதலில் தகவலாளருடன் கதைத்ததாகவும், இரண்டு தடவைகள் அவருடன் கதைத்து தகவல் பற்றிய விவரங்களைப் பெற்றுக்கொண்டதாகவும், அதன்பிறகு அவர் தேசிய புலனாய்வு பிரதானி, பொலிஸ் மாஅதிபர், பாதுகாப்பு செயலாளர் ஆகியோருக்கு WhatsApp ஊடாக அறிவித்ததாகவும், குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு அறிவித்ததாகவும், மேல் மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் மற்றும் கொழும்பு நகருக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ் மாஅதிபர் ஆகியோருக்கு அறிவித்ததாகவும் கூறினார்.[43]. இது முக்கியமான தகவல் எனின் அதனை நாட்டின் தலைவரிடம் ஏன் சொல்லவில்லை என சட்டத்தரணி வினவியபோது, திரு. ஜயவர்தன கூறியதாவது, ஏப்ரல் 20ஆம் திகதி மாலை 6.20 மணியளவில் தாம்

---

[41] Ada Derana, 'Ada Derana Prime Time News Bulletin' (29 November 2021) <https://youtu.be/xXMgsN9s1iY?t=1314> (Time duration: 21:54 - 25:04) accessed on 1 December 2021

[42] Ada Derana, 'Ada Derana Prime Time News Bulletin' (29 November 2021) <https://youtu.be/xXMgsN9s1iY?t=1314> (Time duration: 21:54 - 25:04) accessed on 1 December 2021

[43] කුමුදු ජයවර්ධන, 'පාස්කු ප්‍රහාරයේ බුද්ධි තොරතුර බලධාරීන්ට දැනුම් නොදුන් බව නිලන්ත ජයවර්ධන අධිකරණයේදී පිළිගනී' (*මව්බිම*, 29 November 2021) <https://mawbima.lk/news-more/89804 > accessed on 1 December 2021

ஜனாதிபதியை தொடர்பு கொள்ள முயன்றபோதிலும் அவர் தொடர்பினை ஏற்படுத்தவில்லை என்பதாகும்[44]. இந்த புலனாய்வுத் தகவலை பிரதமர், பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர் போன்ற யாரிடமும் தாம் தெரிவிக்கவில்லை என சாட்சியாளர் திரு. நிலந்த ஜயவர்தன ஏற்றுக்கொண்டார்[45].

அன்றைய தினம் இவ் வழக்கின் முதல் சாட்சியாளர் திரு. நிலந்த ஜயவர்தனவின் ஐந்து நாள் சாட்சியம் வழங்கல் நிறைவு பெற்றது[46]. அதன்பிறகு தற்போதைய பொலிஸ் மாஅதிபரின் சாட்சி நெறிப்படுத்தல் ஆரம்பமானது. எவ்வாறாயினும் நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் பொலிஸ் மாஅதிபர் நீதிமன்றத்துக்கு சமுகமளிக்காததால் நீதிமன்றம் 15 நிமிடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டது[47]. சாட்சியாளரொருவர் தமக்கு வேண்டிய நேரத்திலன்றி நீதிமன்றம் அறிவிக்கும் நேரத்தில் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என அப்போது நீதிபதி கூறினார்.[48]

முறைப்பாட்டாளர் தரப்பின் சார்பில் ஆஜரான சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திரு. திலீப பீரிஸ் அவர்களின் நெறிப்படுத்தலின் கீழ் சாட்சியமளித்த பொலிஸ் மாஅதிபர் திரு. விக்ரமரத்ன அரச பாதுகாப்பு தொடர்பில் பொலிஸ் மாஅதிபர் மீது சுமத்தப்பட்டுள்ள பணி தொடர்பாக விளக்கமளித்தார். அதாவது, பொலிஸ் மாஅதிபர் பதவியானது அரச பாதுகாப்பு தொடர்பான மிகவும் முக்கியமான வகிபாகம் ஆகும். அவர் தேசிய பாதுகாப்பு சபையின் நிரந்தர உறுப்பினர் ஆவார். பாதுகாப்புச் சபையில் உள்ள அனைத்து

---

[44] කුමුදු ජයවර්ධන, 'පාස්කු ප්‍රහාරයේ බුද්ධි තොරතුර බලධාරීන්ට දැනුම් නොදුන් බව නිලන්ත ජයවර්ධන අධිකරණයේදී පිළිගනී' (*මව්බිම,* 29 November 2021) <https://mawbima.lk/news-more/89804 > accessed on 1 December 2021

[45]Hiru News, 'Hiru TV NEWS 6.55PM' (29 November 2021) < https://youtu.be/dXvWfHmJwp0?t=1257> (Time duration: 20:56 - 24:49) accessed on 1 December 2021

[46] කුමුදු ජයවර්ධන, 'පාස්කු ප්‍රහාරයේ බුද්ධි තොරතුර බලධාරීන්ට දැනුම් නොදුන් බව නිලන්ත ජයවර්ධන අධිකරණයේදී පිළිගනී' (*මව්බිම,* 29 November 2021) <https://mawbima.lk/news-more/89804 > accessed on 1 December 2021

[47] කුමුදු ජයවර්ධන, 'පාස්කු ප්‍රහාරයේ බුද්ධි තොරතුර බලධාරීන්ට දැනුම් නොදුන් බව නිලන්ත ජයවර්ධන අධිකරණයේදී පිළිගනී' (*මව්බිම,* 29 November 2021) <https://mawbima.lk/news-more/89804 > accessed on 1 December 2021

[48] කුමුදු ජයවර්ධන, 'පාස්කු ප්‍රහාරයේ බුද්ධි තොරතුර බලධාරීන්ට දැනුම් නොදුන් බව නිලන්ත ජයවර්ධන අධිකරණයේදී පිළිගනී' (*මව්බිම,* 29 November 2021) <https://mawbima.lk/news-more/89804 > accessed on 1 December 2021

உறுப்பினர்களுக்கும் நிகரான அதிகாரங்கள் பொலிஸ் மாஅதிபருக்கும் உள்ளன. நிறைவேற்று அதிகாரம் மூலம் மேற்கொள்ளப்படும் தீர்மானங்களை களத்தில் நடைமுறைப்படுத்துவது பொலிஸ் மாஅதிபர் தலைமையிலான பொலிஸ் திணைக்களத்தினாலேயே நிறைவேற்றப்படுகிறது. தேசிய பாதுகாப்பு மற்றும் அரசியல் தொடர்பான தகவல்கள் குறித்து அரச தலைவருக்கு அறிவிக்கும் பொறுப்பு பொலிஸ் மாஅதிபர் மீது சுமத்தப்பட்டுள்ளது. பொலிஸ் மாஅதிபர் என்பவர் வெறுமனே ஊதியம் பெறும் இன்னுமொரு அரச அதிகாரி அல்ல.[49]

பொலிஸ் மாஅதிபருக்கு ஏதேனும் ஒரு புலனாய்வுத் தகவல் கிடைக்கப்பெறும் பட்சத்தில் அது தொடர்பாக அவர் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் யாவை என திரு. திலீப பீரிஸ் வினவியதற்கு பதிலளிக்கும் வகையில் தற்போதைய பொலிஸ் மாஅதிபர் பின்வருமாறு கூறியதாக சொல்லப்படுகிறது. அதாவது, அவ்வாறான தகவல் கிடைக்கும் பட்சத்தில் அதனை விருத்தி செய்து சம்பந்தப்பட்ட துறையினருக்கு அது குறித்து அறிவித்து அதற்கான தீர்வை களத்தில் நடைமுறைப்படுத்துவது பொலிஸ் மாஅதிபரின் பொறுப்பு ஆகும்[50].

அரச புலனாய்வுச் சேவையிடமிருந்து கிடைக்கப்பெறும் புலனாய்வுத் தகவல்கள் குறித்த உங்களது கருத்து யாது என திரு. திலீப பீரிஸ் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போது அரச புலனாய்வுச் சேவையிடமிருந்து கிடைக்கப்பெறும் தகவல்களை பாதி உண்மை எனவோ முற்றிலும் பிழையானவை எனவோ நாம் கருதுவதில்லை. அந்தத் தகவல்களை உண்மையானவை என்ற முன் முடிவில் நின்றபடியே நாம் நடவடிக்கைகளை மேற்கொள்கிறோம்.

---

[49] Hiru News, 'Hiru TV NEWS 6.55PM' (29 November 2021) < https://youtu.be/dXvWfHmJwp0?t=1257> (Time duration: 20:56 - 24:49) accessed on 1 December 2021

'පොලිස්පති කවුද ?පොලිස්පති කියයි (වීඩියෝ)' (*හිරු NEWS,* 29 November 2021) <පොලිස්පති කවුද ? පොලිස්පති කියයි (වීඩියෝ) - Hiru News - Srilanka's Number One News Portal, Most visited website in Sri Lanka> accessed on 1 December 2021

[50] Hiru News, 'Hiru TV NEWS 6.55PM' (29 November 2021) < https://youtu.be/dXvWfHmJwp0?t=1257> (Time duration: 20:56 - 24:49) accessed on 1 December 2021

ஏதேனுமொரு தகவல் நூற்றுக்கு நூறு முழுமையாக இருக்க வேண்டுமென்பதில்லை. பொலிஸ் மாஅதிபருக்கு அதில் உட்பொதிந்துள்ள விடயத்தின் முக்கியத்துவத்தை கருத்திற்கொண்டு செயற்பட நேரிடும் எனக் கூறியதாக சொல்லப்படுகிறது[51].

பயங்கரவாத தாக்குதல் மேற்கொள்ளப்படவுள்ளதாக அரச புலனாய்வுச் சேவையிடமிருந்து தகவல் கிடைக்கப்பெறும் பட்சத்தில் பொலிஸ் மாஅதிபர் என்ற வகையில் எடுக்கப்படும் நடவடிக்கை யாது என திரு. திலீப பீரிஸ் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையில் அவ்வாறான தகவல் கிடைக்கப்பெறும்போது அதனுடன் தொடர்புடைய திணைக்களத்தில் உள்ள நிபுணத்துவ அறிவு கொண்ட உயர் அதிகாரிகளை அழைத்து கலந்துரையாட வேண்டும் எனவும், பின்பு அத்தகவல்களை புலனாய்வுத் தகவலாக விருத்தி செய்துகொள்ள வேண்டும் எனவும், அதன்பின் அதனை களத்தில் நடைமுறைப்படுத்தும் பணியை பொலிஸ் மாஅதிபர் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும் எனவும், அதுவே ஒரு பொலிஸ் மாஅதிபரின் பொறுப்பு எனவும் பொலிஸ் மாஅதிபர் தெரிவித்தார்[52].

உங்களுக்கு மிகவும் இரகசியமான அறிக்கையொன்று கிடைக்கப்பெறும் பட்சத்தில் நீங்கள் அதனை அப்படியே கீழ்மட்ட அதிகாரிகளுக்கு அனுப்புவீர்களா என சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல் கேள்வியெழுப்பினார்[53]. அதற்கு நான் அவ்வாறு செய்ய மாட்டேன். நான் செய்வது அந்த அறிக்கையை நன்கு ஆய்வு செய்து தேவையான விடயங்களை மேற்கோள்களாக பெயர்த்தெடுத்து பொலிஸ் மாஅதிபரின் பொருத்தமான உத்தரவுகளுடன் கீழ்மட்டத்துக்கு அனுப்புவது ஆகும். ஏனெனில் அரச தலைவர் ஒருவரின்

---

[51] Hiru News, 'Hiru TV NEWS 6.55PM' (29 November 2021) < https://youtu.be/dXvWfHmJwp0?t=1257> (Time duration: 20:56 - 24:49) accessed on 1 December 2021

[52] Hiru News, 'Hiru TV NEWS 6.55PM' (29 November 2021) < https://youtu.be/dXvWfHmJwp0?t=1257> (Time duration: 20:56 - 24:49) accessed on 1 December 2021

[53] Ada Derana, 'Ada Derana Prime Time News Bulletin' (29 November 2021) <https://youtu.be/xXMgsN9s1iY?t=1314> (Time duration: 21:54 - 25:04) accessed on 1 December 2021

அளவுக்கு பொலிஸ் மாஅதிபரும் தேசிய பாதுகாப்பு தொடர்பில் கடப்பாடு உடையவர் ஆவார். ஆகவே, நான் உத்தரவிடவில்லை, எனக்குத் தெரியாது என்று கூற முடியாது என பொலிஸ் மாஅதிபர் திரு. விக்ரமரத்ன பதிலளித்தார்.[54] இவ்வழக்கு விசாரணை 2022 ஜனவரி 18ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது[55].

[54] Ada Derana, 'Ada Derana Prime Time News Bulletin' (29 November 2021) <https://youtu.be/xXMgsN9s1iY?t=1314> (Time duration: 21:54 - 25:04) accessed on 1 December 2021

[55] Ada Derana, 'Ada Derana Prime Time News Bulletin' (29 November 2021) <https://youtu.be/xXMgsN9s1iY?t=1314> (Time duration: 21:54 - 25:04) accessed on 1 December 2021

## பிரிவு 4 : முன்னாள் பாதுகாப்பு செயலாளருக்கு எதிரான HC (TAB) 2899/2021 வழக்கின் முக்கிய தருணங்கள்

2021 நவம்பர் மாதம் 22ஆம் திகதி பிற்பகல் வேளையில் திரு. ஹேமசிரி பெர்னாண்டோ மூன்று நபர் மேல்நீதிமன்றம் முன்னிலையில் ஆஜரானார்[56]. நீதிபதிகள் குழாம் முன்னிலையில் அன்றைய தினம் விசாரணைக்காக இவ்வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் பிரதிவாதிக்கு குற்றப்பத்திரிகையில் உள்ளடங்கிய குற்றச்சாட்டுகள் வாசித்துக் காண்பிக்கப்பட்டதோடு, தாம் அனைத்து குற்றச்சாட்டுகள் தொடர்பிலும் குற்றமற்றவர் என திரு. ஹேமசிரி பெர்னாண்டோ கூறினார்[57]. பிரதிவாதி சார்பில் ஆஜரான சட்டத்தரணி சட்ட மாஅதிபர் தாக்கல் செய்துள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பில் அடிப்படை எதிர்ப்பினை முன்வைப்பதாகக் கூறினார்[58]. அடிப்படை எதிர்ப்பினை நிராகரித்து 2021 நவம்பர் 23ஆம் திகதியன்று இவ்வழக்கை விசாரணைக்காக எடுக்குமாறு நீதிபதிகள் குழாம் உத்தரவு பிறப்பித்தது[59].

ஊடக செய்திகளுக்கமைய பூஜித் ஜயசுந்தர மற்றும் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிரி பெர்னாண்டோ ஆகியோருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் செயற்பாடு 2021 நவம்பர் 23ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது[60].

---

[56] Sirasa, 'News 1st Prime Time Sinhala News – 7 PM' (22 November 2021) <https://youtu.be/Pf5sTYLBtiw?t=684 > (Time duration: 11:18 - 12:36) accessed on 30th November 2021

[57] හංසි නානායක්කාර, 'පාස්කු ප්‍රහාරය: චෝදනාවලට එරෙහිව හිටපු ආරක්ෂක ලේකම්ගෙන් මූලික විරෝධතාවක්' (22 November 2021) <https://mawbima.lk/news-more/89657 > accessed on 22nd December 2021

[58] හංසි නානායක්කාර, 'පාස්කු ප්‍රහාරය: චෝදනාවලට එරෙහිව හිටපු ආරක්ෂක ලේකම්ගෙන් මූලික විරෝධතාවක්' (22 November 2021) <https://mawbima.lk/news-more/89657 > accessed on 22nd December 2021

[59] හංසි නානායක්කාර, 'පාස්කු ප්‍රහාරය: චෝදනාවලට එරෙහිව හිටපු ආරක්ෂක ලේකම්ගෙන් මූලික විරෝධතාවක්' (22 November 2021) <https://mawbima.lk/news-more/89657 > accessed on 22nd December 2021

[60] Ada Derana, 'Ada Derana Prime Time News Bulletin' (23 November 2021) <https://youtu.be/krMXahiVbvg?t=1877 > (Time duration: 31:17 - 31:43) accessed on 1 December 2021

ஊடகங்களின் செய்திகளுக்கமைய, 2021 நவம்பர் 24ஆம் திகதி முன்னாள் பொலிஸ் மாஅதிபர் பூஜித் ஜயசுந்தர மற்றும் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிரி பெர்னாண்டோ ஆகிய பிரதிவாதிகளுக்கு எதிரான வழக்கில் இரண்டாவது நாளாகவும் சாட்சியமளித்தவர் அரச புலனாய்வுப்பிரிவின் முன்னாள் பிரதானி சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் நிலந்த் ஜயவர்தன ஆவார்[61].

2021 நவம்பர் மாதம் 25ஆம் திகதியும் முறைப்பாட்டாளர் தரப்பினர் சார்பில் திரு. நிலந்த ஜயவர்தன சாட்சியமளித்தார். ஏப்ரல் 21ஆம் திகதி 08 இடங்களின் மீது தாக்குதல் மேற்கொள்ளபடலாம் என 2019 ஏப்ரல் 20ஆம் திகதி பிற்பகல் 4.14 மணியளவில் தமக்கு புலனாய்வுத் தகவலொன்று கிடைக்கப்பெற்றதாக திரு. நிலந்த ஜயவர்தன அன்றைய தினம் உறுதிப்படுத்தினார்[62]. கொழும்பு விசேட மூன்று நபர் மேல்நிதிமன்றம் முன்னிலையில் தாம் உடனடியாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் பொலிஸ் மாஅதிபர் உள்ளிட்ட பொறுப்பு வாய்ந்தோருக்கு அவ்விடயம் தொடர்பில் அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுத்ததாக அவர் கூறினார்[63]. ஏப்ரல் 20ஆம் திகதி கிடைக்கப்பெற்ற புலனாய்வுத் தகவலை தொலைபேசி அழைப்பினூடாக பொலிஸ் மாஅதிபருக்கு அறிவித்ததாக சாட்சியாளர் குறிப்பிட்டார்[64]. எனினும் அத்தகவலை அவர் அவ்வளவாக கணக்கிலெடுக்கவில்லை என தாம் உணர்ந்ததால் அது தொடர்பில் பாதுகாப்பு செயலாளருக்கு அறிவித்ததாக திரு. ஜயவர்தன கூறினார். அத்துடன் அந்தத் தகவலை பொலிஸ் மாஅதிபர்

---

[61] Sirasa, 'News 1st Prime Time Sinhala News – 7 PM' (24 November 2021) <https://youtu.be/-dzhbshxXvE?t=1418 > (Time duration: 23:36 - 27:24) accessed on 30th November 2021

[62] Sirasa, 'News 1st Prime Time Sinhala News – 7 PM' (25 November 2021) <https://www.youtube.com/watch?v=kX3wjLAymIA> (Time duration: 24:45 - 27:23) accessed on 30th November 2021

[63] Sirasa, 'News 1st Prime Time Sinhala News – 7 PM' (25 November 2021) <https://www.youtube.com/watch?v=kX3wjLAymIA> (Time duration: 24:45 - 27:23) accessed on 30th November 2021

[64] Sirasa, 'News 1st Prime Time Sinhala News – 7 PM' (25 November 2021) <https://www.youtube.com/watch?v=kX3wjLAymIA> (Time duration: 24:45 - 27:23) accessed on 30th November 2021

முக்கியமானதொன்றாக கணக்கில் கொள்ளவில்லை என தாம் உணர்வதாக பாதுகாப்பு செயலாளருக்கு தாம் கூறியதாகவும் திரு. ஜயவர்தன மேலும் குறிப்பிட்டார்[65].

2021 நவம்பர் மாதம் 26ஆம் திகதி இவ்வழக்கில் பிரதிவாதியின் தரப்பு அன்றைய முதல் சாட்சியாளரான திரு. நிலந்த ஜயவர்தனவை குறுக்கு விசாரணை செய்ததோடு 2021 நவம்பர் 23ஆம் திகதி வழங்கிய வாக்குமூலம் தொடர்பில் முரண்கள் குறிக்கப்பட்டபோது பொருத்தமற்ற அரசியல்மயப்படுத்தப்பட்ட கேள்விகளை கேட்பதைத் தவிர்க்குமாறு நீதிபதிகள் பிரதிவாதி தரப்பினரை எச்சரித்தனர்[66]. இவ்வழக்கினை 2021 டிசம்பர் 13ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது[67].

2021 டிசம்பர் 13ஆம் திகதி இலங்கை இராணுவத்தின் முன்னாள் புலனாய்வுப் பணிப்பாளர் திரு. கொடிதுவக்குவின் சாட்சி நெறிப்படுத்தல் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திரு. சுதர்ஷன டி சில்வாவினால் மேற்கொள்ளப்பட்டது[68]. இலங்கை இராணுவத்துக்கு புலனாய்வுத் தகவல்கள் கிடைக்கப்பெறும் முறைமுறை, ஒரு சாதாரண தகவல் புலனாய்வுத்தகவலாக மாறும் முறை, மற்றும் இச் செயன்முறையின்போது பின்பற்ற வேண்டிய படிமுறைகள் ஆகிய விடயங்கள் தொடர்பில் சாட்சியாளர் தெளிவு படுத்தினார்.[69]. கண்டறியப்பட்டதற்கமைய 2017 முதல் 2019 ஏப்ரல் வரையிலான காலப்பகுதியினுள் 9 சந்தர்ப்பங்களில் சஹ்ரான் ஹஷீமுக்கு எதிராக பொருத்தமான சட்ட நடவடிக்கை எடுக்குமாறு சாட்சியாளர் பொலிஸ்

---

[65] Sirasa, 'News 1st Prime Time Sinhala News – 7 PM' (25 November 2021) <https://www.youtube.com/watch?v=kX3wjLAymIA> (Time duration: 24:45 - 27:23) accessed on 30th November 2021

[66] Trial monitoring report on 26th of November, 2021 – Case No: HC (TAB) 2899/21

[67] Dilshan Tharaka, 'Easter attacks case: IGP noticed to appear in court'(*Daily news,* 27 November 2021)<https://www.dailynews.lk/2021/11/27/law-order/265829/easter-attacks-case-igp-noticed-appear-court > accessed on 1 December 2021

[68] Trial monitoring report on 13th of December, 2021 – Case No: HC (TAB) 2899/21

[69] Trial monitoring report on 13th of December, 2021 – Case No: HC (TAB) 2899/21

மாஅதிபருக்கு அறிவித்துள்ளார்[70]. 2019 ஏப்ரல் 04ஆம் திகதி அரச புலனாய்வுச் சேவைக்கு கிடைக்கப்பெற்ற தகவல்களை முதலாம் சாட்சியாளர் திரு. நிலந்த ஜயவர்தன 2019 ஏப்ரல் 09ஆம் திகதி நடைபெற்ற தேசிய புலனாய்வு சபையிடம் (National Intelligence Council) முன்வைத்தாரா என கௌரவ நீதிபதிகள் சாட்சியாளரிடம் வினவினர்.[71]. முதலாம் சாட்சியாளர் தேசிய புலனாய்வு சபையிடம் சம்பந்தப்பட்ட தினத்தில் எந்தவொரு தகவலையும் முன்வைக்கவில்லை என சாட்சியாளர் தெரிவித்தார்[72].

2021 டிசம்பர் 14ஆம் பிரதிவாதியான முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஊடகத்துக்கு அளித்த ஒரு கூற்றினை உள்ளடக்கிஹ காணொளி நீதிமன்றில் ஒலிக்க விடப்பட்டதோடு அதனுடன் தொடர்பு பட்ட ஆங்கிலமொழியில் தயாரிக்கப்பட்ட ஓர் ஆவணம் முறைப்பாட்டாளர்களால் நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டது[73]. அந்தக் காணொளி தெரண செய்தியறிக்கையின் ஒரு பகுதியாக இருந்ததுடன், 22/04/2019 திகதியின் செய்தியறிக்கையாக காணப்பட்டது[74]. அந்தக்காணொளியை உள்ளடக்கிய இறுவட்டும் நீதிமன்றுக்கு சமர்ப்பிக்கப்பட்ட மேற்கூறிய ஆவணம் ஆகியவை முறைப்பாட்டாளர் தரப்பினரின் சாட்சியங்களாக குறிக்கப்பட்டன[75]. முறைப்பாட்டாளர் தரப்பு காட்சியாளராக தெரண ஊடக வலையமைப்பின் சிரேஷ்ட செய்தி முகாமையாளர் திரு. தரங்க நிமேஷ் ஜயக்கொடி சாட்சியம் வழங்கினார்[76]. அருட்தந்தை சமீர ரொட்ரிகோ அவர்களும் சாட்சியம் அளித்தார்[77]. இந்த தாக்குதல்

---

[70] Trial monitoring report on 13th of December, 2021 – Case No: HC (TAB) 2899/21

[71] Trial monitoring report on 13th of December, 2021 – Case No: HC (TAB) 2899/21

[72] Trial monitoring report on 13th of December, 2021 – Case No: HC (TAB) 2899/21

[73] Trial monitoring report on 14th of December, 2021 – Case No: HC (TAB) 2899/21

[74] Trial monitoring report on 14th of December, 2021 – Case No: HC (TAB) 2899/21

[75] Trial monitoring report on 14th of December, 2021 – Case No: HC (TAB) 2899/21

[76] Trial monitoring report on 14th of December, 2021 – Case No: HC (TAB) 2899/21

[77] Trial monitoring report on 14th of December, 2021 – Case No: HC (TAB) 2899/21

நிகழ்த்தப்பட்டபோது தேவாலயத்தினுள் 800இற்கும்1000இற்கும் இடைப்பட்ட மக்கட்தொகையினர் இருந்ததாகவும், வெளியிலும் ஒரு தொகை மக்கள் இருந்ததாகவும் சாட்சியாளர் தெரிவித்தார்[78]. தாக்குதல் குறித்து முன்கூட்டியே அறிவித்தல் எதுவும் கிடைக்கபெற்றிக்கவில்லை எனவும் சாட்சியாளர் தெரிவித்தார்[79]. சாட்சியாளரான திரு. உபாலி ரத்நாயக்கவும் அன்றைய தினம் சாட்சியமளித்தார்[80]. அவர் 2019ஆம் ஆண்டு பணிப்பாளர் நாயகம் - சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை என்ற பதவியை. வகித்துள்ளார்.[81].

முன்னாள் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் திரு. ருவன் விஜேவர்தன அவர்களும் 2021 டிசம்பர் 14ஆம் திகதி சாட்சியளித்தார்[82]. ஜனாதிபதி வெளிநாட்டுப்பயணத்துக்கு செல்லும்போது சில நேரங்களில் சாட்சியாளர் கடமை நிறைவேற்று பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளதோடு, சிற்சில சந்தர்ப்பங்களில் சாட்சியாளருக்கு நியமனக்கடிதம் கிடைக்கப்பெறுவதற்குள் வெளிநாட்டு விஜயம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி மீண்டும் இலங்கைக்குத் திரும்பியிருந்த நிகழ்வுகளும் நிகழ்ந்துள்ளதாக

---

“පාස්කු ප්‍රහාරය දා දේව මෙහෙය සිදුකළ පියතුමා අධිකරණයේදී දැඩිව හැඟුම්බරවෙයි – මතකයන් යළි මතක් කරන්න එපා විනිසුරු මඩුල්ල කියයි” (Newshub.lk, 14 December 2021)
< පාස්කු ප්‍රහාරය දා දේව මෙහෙය සිදුකළ පියතුමා අධිකරණයේදී දැඩිව හැඟුම්බරවෙයි – මතකයන් යළි මතක් කරන්න එපා විනිසුරු මඩුල්ල කියයි | News Sri Lanka | Latest News Sri Lanka| Breaking News Sri Lanka| News Hub| Gossip Sri Lanka > accessed on 14th of December 2021

[78] Trial monitoring report on 14th of December, 2021 – Case No: HC (TAB) 2899/21
“පාස්කු ප්‍රහාරය දා දේව මෙහෙය සිදුකළ පියතුමා අධිකරණයේදී දැඩිව හැඟුම්බරවෙයි – මතකයන් යළි මතක් කරන්න එපා විනිසුරු මඩුල්ල කියයි” (Newshub.lk, 14 December 2021)
< පාස්කු ප්‍රහාරය දා දේව මෙහෙය සිදුකළ පියතුමා අධිකරණයේදී දැඩිව හැඟුම්බරවෙයි – මතකයන් යළි මතක් කරන්න එපා විනිසුරු මඩුල්ල කියයි | News Sri Lanka | Latest News Sri Lanka| Breaking News Sri Lanka| News Hub| Gossip Sri Lanka > accessed on 14th of December 2021

[79] Trial monitoring report on 14th of December, 2021 – Case No: HC (TAB) 2899/21
“පාස්කු ප්‍රහාරය දා දේව මෙහෙය සිදුකළ පියතුමා අධිකරණයේදී දැඩිව හැඟුම්බරවෙයි – මතකයන් යළි මතක් කරන්න එපා විනිසුරු මඩුල්ල කියයි” (Newshub.lk, 14 December 2021)
< පාස්කු ප්‍රහාරය දා දේව මෙහෙය සිදුකළ පියතුමා අධිකරණයේදී දැඩිව හැඟුම්බරවෙයි – මතකයන් යළි මතක් කරන්න එපා විනිසුරු මඩුල්ල කියයි | News Sri Lanka | Latest News Sri Lanka| Breaking News Sri Lanka| News Hub| Gossip Sri Lanka > accessed on 14th of December 2021

[80] Trial monitoring report on 14th of December, 2021 – Case No: HC (TAB) 2899/21

[81] Trial monitoring report on 14th of December, 2021 – Case No: HC (TAB) 2899/21

[82] Trial monitoring report on 14th of December, 2021 – Case No: HC (TAB) 2899/21

அறியக்கிடைத்தது[83]. 2018ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இடம்பெற்ற அரசியலமைப்பு சிக்கலின் பின்னர் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன பிரதமரையும் தம்மையும் பாதுகாப்பு சபை கூட்டங்களுக்கு அழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் சாட்சியாளர் கூறினார்[84]. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடத்தப்பட்டதன் பின்னர் பிரதமர் திரு. ரணில் விக்ரமசிங்க தம்மை தொலைபேசியில் தொடர்பு கொண்டு அலரி மாளிகையில் பாதுகாப்புச் சபைக் கூட்டமொன்றைக் கூட்டுமாறு அறிவித்ததாகவும் அச்சந்தர்ப்பத்தில் தாம் பாதுகாப்பு அமைச்சில் இருந்ததாகவும், அச்சந்தர்ப்பத்தில் பாதுகாப்பு அமைச்சில் முப்படைத்தளபதிகள் உள்ளிட்ட பாதுகாப்புத்துறை அதிகாரிகள் குழுமியிருந்ததாகவும், தாம் பாதுகாப்புச் சபைக் கூட்டமொன்றுக்காக பிரதமர் அனைவரையும் அலரி மாளிகைக்கு வருகை தரச்சொல்கிறார் என்பதை அவர்களிடம் அறிவித்ததாகவும், எனினும் ஒருவருமே எழுந்திருக்க வில்லை எனவும் சாட்சியாளர் தெரிவித்தார்[85]. பின்னர் சாட்சியாளர் இது தொடர்பில் திரு. ஹேமசிரி பெர்னாண்டோவிடம் விசாரித்துள்ளதோடு, பிரதமரால் அழைப்பு விடுக்கப்படும் எந்தவொரு கூட்டத்திலும் கலந்துகொள்ள வேண்டாமென ஜனாதிபதி கூறியுள்ள்ளதாக திரு. ஹேமசிரி பெர்னாண்டோ சாட்சியாளரிடம் கூறியதாகச் சொல்லப்பட்டது[86]. அந்த இடத்தில் அரச புலனாய்வு சேவையின் பிரதானி நிலந்த ஜயவர்தன இருந்ததாகவும், சாட்சியாளர் தாக்குதல் தொடர்பில் முன்கூட்டியே தனக்கு ஏன் அறிவிக்கவில்லை என அவரிடம் வினவியதாகவும், அச்சந்தர்ப்பத்தில் நிலந்த ஜயவர்தன

---

[83] Trial monitoring report on 14th of December, 2021 – Case No: HC (TAB) 2899/21

[84]" අද දෙරණ 6.55 ප්‍රධාන පුවත් විකාශය - 2021.12.14 | Ada Derana Prime Time News Bulletin" (Ada Derana, 14 December 2021) <https://www.youtube.com/watch?v=ijnONpQ3GEI > accessed on 15th of December 2021(Time duration:27:01 – 28:50)

[85]" අද දෙරණ 6.55 ප්‍රධාන පුවත් විකාශය - 2021.12.14 | Ada Derana Prime Time News Bulletin" (Ada Derana, 14 December 2021) <https://www.youtube.com/watch?v=ijnONpQ3GEI > accessed on 15th of December 2021(Time duration:27:01 – 28:50)

[86]" අද දෙරණ 6.55 ප්‍රධාන පුවත් විකාශය - 2021.12.14 | Ada Derana Prime Time News Bulletin" (Ada Derana, 14 December 2021) <https://www.youtube.com/watch?v=ijnONpQ3GEI > accessed on 15th of December 2021(Time duration:27:01 – 28:50)

தகவல் வழங்க முடியாமல் போனதற்கு மன்னிப்புக்கேட்டதாகவும் சாட்சியாளர் குறிப்பிட்டார்[87].

2021 டிசம்பர் 15ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக விசாரித்த ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு 2019ஆம் ஆண்டு சமர்ப்பிக்கபட்டிருந்த மருத்துவ அறிக்கையொன்றை மேற்கோள் காண்பித்து மூன்றாவது சாட்சியாளரான முன்னாள் தேசிய புலனாய்வுப் பிரதானி திரு. சிசிர மெண்டிஸின் சாட்சியத்தை அழைக்குமுன் நீதிமன்ற வைத்திய அதிகாரிக்கு அதனை அனுப்பி அறிக்கையொன்றைப் பெறுவதற்கு உத்தரவிடுமாறு முறைப்பாட்டாளர் தரப்பு சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திரு. சுதர்ஷன டி சில்வா நீதிமன்றத்திடம் வேண்டினார்[88]. பிரதிவாதியான திரு. ஹேமசிரி பெர்னாண்டோ சார்பாக ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி திரு. மொஹான் வீரகோன் சம்பந்தப்பட்ட அறிக்கை ஊடாக சாட்சியாளருக்கு சாட்சியமளிக்க முடியாத அளவுக்கு உளவியல்ரீதியாக சங்கடம் எதுவும் குறிப்பிடப்பட்டிருக்க வில்லை அதன்போது நீதிமன்றத்துக்கு தெரிவித்தார்[89]. திரு. சிசிர மெண்டிஸ் சாட்சியமளிக்கக்கூடிய நிலையில் இருப்பதாகவும், அவருக்கு ஏற்பட்டிருக்கும் நோய் நிலைமையின் அடிப்படையில் அவ்வப்போது ஓய்வெடுக்க நேரிடலாம் எனவும், அவரது உரிமைகள் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி ஷானக ரணசிங்க தெரிவித்தார்[90]. திரு. சிசிர மெண்டிஸின் சாட்சியத்தை அழைப்பதற்கு நீதிபதிகள் குழாம்

---

[87] " අද දෙරණ 6.55 ප්‍රධාන පුවත් විකාශය - 2021.12.14 | Ada Derana Prime Time News Bulletin" (Ada Derana, 14 December 2021) <https://www.youtube.com/watch?v=ijnONpQ3GEI > accessed on 15th of December 2021(Time duration:27:01 – 28:50)

[88] "හිරු රාත්‍රී 6.55 ප්‍රධාන ප්‍රවෘත්ති ප්‍රකාශය - Hiru TV NEWS 6:55 PM Live | 2021-12-15" (Hiru News, 15 December 2021) < https://youtu.be/y3C6VidEV_A?t=1839 > accessed on 16 December 2021 (Time duration:30:38 – 33:33)

[89] "හිරු රාත්‍රී 6.55 ප්‍රධාන ප්‍රවෘත්ති ප්‍රකාශය - Hiru TV NEWS 6:55 PM Live | 2021-12-15" (Hiru News, 15 December 2021) < https://youtu.be/y3C6VidEV_A?t=1839 > accessed on 16 December 2021 (Time duration:30:38 – 33:33)

[90] "හිරු රාත්‍රී 6.55 ප්‍රධාන ප්‍රවෘත්ති ප්‍රකාශය - Hiru TV NEWS 6:55 PM Live | 2021-12-15" (Hiru News, 15 December 2021) < https://youtu.be/y3C6VidEV_A?t=1839 > accessed on 16 December 2021 (Time duration:30:38 – 33:33)

தீர்மானித்தது[91]. எனினும் திரு. சிசிர மெண்டிஸை சாட்சியத்துக்காக அழைக்காதிருக்க முறைப்பாட்டாளர் தரப்பு தீர்மானித்துள்ளதாக பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திரு. சுதர்ஷன டி சில்வா நீதிமன்றத்துக்கு அறிவித்தார்[92]. இவ்வழக்கு விசாரணை 2022 ஜனவரி 18ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டது[93].

[91] "හිරු රාත්‍රී 6.55 ප්‍රධාන ප්‍රවෘත්ති ප්‍රකාශය - Hiru TV NEWS 6:55 PM Live | 2021-12-15" (Hiru News, 15 December 2021) < https://youtu.be/y3C6VidEV_A?t=1839 > accessed on 16 December 2021 (Time duration:30:38 – 33:33)

[92] "හිරු රාත්‍රී 6.55 ප්‍රධාන ප්‍රවෘත්ති ප්‍රකාශය - Hiru TV NEWS 6:55 PM Live | 2021-12-15" (Hiru News, 15 December 2021) < https://youtu.be/y3C6VidEV_A?t=1839 > accessed on 16 December 2021 (Time duration:30:38 – 33:33)

[93] "හිරු රාත්‍රී 6.55 ප්‍රධාන ප්‍රවෘත්ති ප්‍රකාශය - Hiru TV NEWS 6:55 PM Live | 2021-12-15" (Hiru News, 15 December 2021) < https://youtu.be/y3C6VidEV_A?t=1839 > accessed on 16 December 2021 (Time duration:30:38 – 33:33)